மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற அந்தக் கேள்விக்கு எந்தவிதமான ஆதாரமும் இந்த அரசிடம் இல்லை. முன்னாலே இருந்த அரசு இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நாடெங்கும் ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பியது. இப்போது அது மாற்றுத் திட்டமாக பரிசீலனையில் இருந்து வருகிறது என்று மட்டும்தான் இந்த அரசிடம் தகவல் இருக்கிறது.

வசிஷ்டர் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 975—திரு. இரா. திருமான் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏற்காடு சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் பேளூர் வசிஷ்டர் நதியின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் எப்போது ஆரம்பமாகும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பேளூர் வசிஷ்டர் நதியின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் ரூ. 14.00 இலட்சம் செலவில் செயல்படுத்த 1981–82 ஆம் ஆண்டு இரண்டாம் பாகத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது, அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டதும் வேலை துவங்கப்படும்.

திரு. இரா. திருமான் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தினை இந்த ஆண்டே கட்டி முடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படும்.

மதுரை—சாத்தூர் இணைப்புச் சாலை.

* வினா எண் 976—திரு. மு. சுந்தரராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் நகராட்சியினரால் ஆரம்பிக்கப்பட்ட மதுரை—சாத்தூர் இணைப்புச் சாலை (காமராஜ் பைபாஸ் ரோடு) முடிவடையாமல் இருப்பதன் காரணம் என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS